பிற்பகல் 4–40

6. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும், மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஏ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, 2004

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 5) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. *(ஆம்)*

மறுப்போர் ‘இல்லை’ என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.